முரசொலி
வார இதழ்
2 அணா
ஆசிரியர்.. மு.கருணாநிதி
முரசு 1 | சென்னை | 11 — 6 — 54 | வெள்ளி | ஒலி 11

# கொள்கைத் திருப்பம்--ஒரு கொள்ளைத் திட்டம்

அவன் வெகுண்டெழுந்தால் வையகமே நிலைகொள்ளாது-காரணம் அவன் முடியிலே மந்திரசக்தி இருப்பதாக பலரும் நம்பினர்—அவன்கூட நம்பியிருந்தான்.

இந்த கடோற்கஜனின் காலை வாரிவிட காளையர் பலரை மன்னன் அனுப்பிவைத்தான்—அவர்களோ காலொடிந்து திரும்பினர். அவன் மார்பிலே ஈட்டி பாய்ச்ச சென்ற சேனை வீரர்கள் அவன் சேவடி தொழுது புறமுதுகு காட்டி ஓடி வந்தனர். "மன்னர் மன்னவா! சாம்சன் இறைவனருள் பெற்றவன். எங்களால் எதிர்க்க முடியாது"! என்று ஒப்பாரி வைத்தனர். கொலு மண்டபம் பெருமூச்சு விட்டது, எதிரியின் வெற்றியைக் கண்டு! திடீரென ஒரு மங்கை எழுந்தாள். "சாம்சனை எதிர்க்க என் ஒருத்தியால்தான்முடியும்; படைபலம் வேண்டாம் அரசே; விடை தந்தால் போதும், அவனை நான் பாடையில் ஏற்றி விடுவேன். பகவான் எனக்கு அளித்த பாகு மொழியின் முன்பு அவன் மிருக பலம் என்னாவது? "—மந்திரி பிரதானியர் சிரித்த போதும் டிலைலா தன் சபதத்தை நிறைவேற்றியே தீருவதாக வெஞ்சினம் கூறினாள்.

நாட்கள் பல ஓடின. டிலைலா ஒரு நாள் சாம்சனை சந்தித்தாள். அவனுடைய மலை போன்ற தோள்களிலே தொத்துக்கிளியென சாய்ந்தாள். "வீரத்தின் பெட்டகமே! விவேகத்தின் இருப்பிடமே! இங்கே வா, இன்ப உலகு சமைப்போம்"—என்று பற்பல கூறி சாம்சனை கட்டிலிலே சாய வைத்தாள். அவனும் இன்ப வாரிதியிலே மிதந்தான்.

பொழுது விடிந்தது. மொட்டைத் தலையனாய் சாம்சன் விழுந்து கிடந்தான். வாளும் வேலும் கொண்ட வீரர்களால் வெல்ல முடியாத சாம்சன் ஒரு சாதாரண வனிதைக்கு பலியானான்; பலஹீனனாக மாறிவிட்டான்.

பைபிளின் கதைதான் இது. இருந்தாலும் இருபதாம் நூற்றாண்டிலும் நடத்திக் காண்பிக்கப் படுகிறது, எந்தவிதக் குறைபாடுமின்றி!

டில்லி மூலவர்கள் தென்னகத்து பள்ளிகளிலே இந்தியைக் கட்டாயமாக இழுத்து வந்து உள்ளே தள்ளினர். "எதிர்க்கிறீர்களா? அப்படியானால் இதோ இருக்கிறது வெள்ளைக்காரன் கொடுத்துச் சென்ற வாய்ப்பூட்டுச்சட்டம்; அவர்களையெல்லாம் சிறையிலே பூட்டுங்கள்"—என்று எக்காளமிட்டார்கள். சாம்சனை எதிர்க்க மன்னவன் படைவீரர்களை அனுப்பியதைப்போல, திருவிடத்து மக்கள் சக்தியும், அதை அணைத்து நிற்கும் திராவிடர் இயக்கமும் சாம்சனின் முடியைப் போல வலிமை வாய்ந்தது—என்கிற உண்மையை உணராத இந்தி வெறியர்கள் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டனர்.

ஆனால் சென்ற வார செய்தித்தாள்களைப் புரட்டும் போது இந்தி வெறியர்கள் தங்கள் கொள்கையை மாற்றியிருக்கிறார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. சுடுசொல் என்னும் நடைபாவாடை விரித்து, முன் கோபமென்னும் சாமரம் வீச டில்லி மூலஸ்தானத்தில் கொலுவீற்றிருக்கும் நேருப் பண்டிதர் கூட இப்போது சாந்த சொரூபி போல பேசுகிறார்; "தென்னாட்டின் மீது இந்திமொழியை வலுக்கட்டாயமாகத்திணிக்கக்கூடாது. அவர்களையே அதன் முக்கியத்தை உணரச் செய்ய வேண்டும்; பிரதேச பாஷைக்கு எதிர்ப்பு இருப்பதாக எண்ணம் ஏற்படக் கூடாது" என்று பார்லிமெண்டரி காங்கிரஸ் கட்சியின் அந்தரங்கக் கூட்டத்தில் ஆறுதல் சொல்லியிருக்கிறார் அவசரக்காரர்களுக்கு தென்னாடு என்றதும் தேள் கொட்டிய சிறுமியைப் போல துடிதுடிக்கும் அலகாபாத் வீரர் தொனி குறைத்து-ஹானி ஏதுமின்றி வார்த்தைகளை அடுக்கியிருக்கிறார்! கொழும்பு மாநாட்டில் கொடி உயர்த்திய கோமகன் மட்டுமல்ல—வடக்கே இருந்து சென்னைக்கு வந்து போவோரெல்லாம் சுதி குறைத்தே சேதியைச் சொல்கின்றனர்—அவசரம் கூடாது என்ற தோரணையிலே!

இப்படி கொள்கையில் ஏற்பட்டிருக்கும் ஒரு திருப்பம் தென்புலத்து மக்கள் மீது இந்தியைத் திணிக்க முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சூதுத் திட்டம் என்பதை ஒளித்துவிட எவ்வளவோ மூடிமறைக்கிறார்கள் வடநாட்டு காங்கிரஸ் தோழர்கள். ஆனால் திடீரென உண்மையை எடுத்து மக்கள் மன்றத்திலே வீசிவிட்டார், டெல்லி பாராளுமன்றத்தின் சபாநாயகர் மாவ்லங்கர். இனிமேல் டெல்லி பாராளுமன்றம் "லோக் சபா" என்றே அழைக்கப்படுமாம்; டில்லி செக்ரட்டேரியட்டை 'லோக் சபா சச்சிவாலயா' என்றே சொல்ல வேண்டுமாம்.

செய்தித்தாளைப் படிக்காதவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள் இந்தி பேசாதமற்ற மாகாணத்து பிரதிநிதிகளெல்லாம் எதிர்ப்புக் கணைகளை வீசியிருப்பார்கள்—ஆனால் தாண்டன் போன்ற இந்தி வெறியர்கள் அந்த கண்டனக் குரலைக் கேட்டு மனம் குழம்பி, இந்தப் பிரச்னையை 'வாபஸ்' வாங்கிவிடலாமா என்று கூட எண்ணியிருப்பார்கள், கடைசியில் நேருவின் தலையீட்

[ 6-ம் பக்கம் ]

## இவரைப் பற்றி...



பேனா ஓவியம்

5-ம் பக்கம்

# அகர்வால் அகவல்!

## அதிர் வேட்டு

வருவார் வருவார் என வழி மேல் விழி வைத்திருந்தார்கள் ஊழியர்கள். வந்து இன்பம் தருவார், அன்பு முத்திரை பெறுவோம் என உக்கிக் கிடந்தனர்—உமிழ்நீர் வடித்தனர் குட்டித் தலைவர்கள். ஆமாம், வரப்போகிறவர் சாமான்யரல்லவே, காந்தியாரின் பிரதமசீடர், அ. இ. கா. க. செயலாளர், காந்தீய அரசியலை நன்குணர்ந்தவர் — அவர் சொன்னால் நான் சொன்னதைப் போல என்று காந்தியாரின் இதய பீடத்தில் இடம் பெற்றவர் — அவரல்லவா வரப்போகிறார்!

அவருடைய திருப் (!)பாதம் தமிழகத்து மண்ணில் பதிந்தது. "அகர்வால் வந்துவிட்டார், காங்கிரஸ் செயலாளர் நம்மையெல்லாம் கண்டுபோக வந்து விட்டார், வட நாடாம் — தென்னாடாம் — பிரிவினையாம் — பேசுகிறார்கள் பித்தர்கள்" — என பூரித்துப் பேசினர் பூண் பிடித்த கம்பு தாங்கிகள் — புலகாங்கித மடைந்தனர் பெருந்தலைகளாக வர எண்ணும் சிறுதலைகள். வந்த அந்த மனிதர் என்ன பேசினார்? "தென்னாட்டின் வாழ்வுக்கான திட்டங்கள் தயாரித்து விட்டோம்; நீர் காணா நிலங்களுக்கு நீர் தந்து வளப்படுத்த புதிய முறை இதோ காணீர்" என்று பேசினார். வட நாடு — தென்னாடு பேதம் காட்டாதீர்கள் — என்று முலாம் பூசிய மொழிகளால் புத்துறவு ஏற்படுத்த அல்லவா வந்திருக்கிறார் அந்தப் பெரியமனிதர். வட நாட்டிலிருந்து வந்து போகும் மற்றவர்களைப் போலவேதான் அகர்வால் 'வெத்து வேட்டு' விட்டிருக்கிறாரென்றாலும் இந்த வேட்டு சற்றும் அதிகம் ஒலித்து ஓசை கிளப்பக்கூடியது. —ஆமாம், வெடி உப்பும், கெந்தகமும் கூடுதலான அளவு கலந்திருக்கும் அகர்வால் வேட்டுக் குழாயில்! இதோ அந்த அதிர் வேட்டு மின்னலிட்டு வெடிப்பதைப் பாருங்கள்.

## தன் குறை மறைக்க...

"இந்தியாவுக்குக் கிடைத்த போதுதான், பாகிஸ்தானுக்கும் சுதந்திரம் கிடைத்தது. அவர்கள் இன்னும் தனியாக ஒரு அரசியல் சட்டத்தை வகுத்துக் கொள்ளவில்லை. ரஷ்யா கூட 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்துக் கொண்டது" என்று பேசியிருக்கிறார் அகர்வால்.

தனக்கென தனியாக ஒரு அரசியல் நிர்ணய சட்டத்தை வகுத்துக் கொண்டதாக பெருமைப் படுகிறார் காங்கிரஸ் காரியதரிசி— இந்தியத் துணைக் கண்டத்தின் சுதந்திர விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய பிறகு காலம் தாழ்த்தி விலங்கு முறித்த இலங்கை, சுதந்திரப் போராட்டத்தில் தவளையைப் போல கத்திச் சென்ற பர்மா, செத்துப் பிழைத்த சீனா, சுகர்ணாவின் திருப்பணியால் சுயேச்சை அடைந்த இந்தோனேஷியா—இவைகளென்ன சுடுகாடுகளாகவா போய்விட்டன! தனியாக அரசியல் நிர்ணயச் சட்டம் தயாரித்துவிட்டார்களாம்—நினைத்து நினைத்து நெஞ்சுருகுகிறார். டொமினியன் அந்தஸ்துள்ள நாடுகள் தாம் சுகம்பெற முடியும்; தனியாக அரசியல் நிர்ணயச் சட்டம் இயற்றியவர்கள் அவதிப்பட்டுத்தான் ஆவார்கள் என்று காந்திய அரசியல் கூறுகிறது? தன குறையை மறைக்க அடுத்த வீட்டுக்காரனின் குறையைகூறுவதாமுறை? நல்வாழ்வு நடத்துகிற நாடுகளை முன்நிறுத்து ஏன் அகர்வால் அதற்காவன செய்யக்கூடாது!

## காப்பிக்குப் பதிலாக கள்ளா?

அன்பர் அகர்வால் அதோடு நின்றுவிடவில்லை. கல்வித்திட்டம் பற்றியும் பேசியிருக்கிறார். 'பழைய கல்வி முறையே, இந்நாட்டில் நீடிக்கவேண்டும்; மாறுதல் கூடாது என்று கூறுவது மடமை. மாறுதல் அவசியம். பிரிட்டிஷ்காரர்களின் கல்வி முறையே நீடிக்க வேண்டுமென்பது தவறு" எனறு சற்று கோபமாகவே பேசியிருக்கிறார்.

எந்த பிரிட்டிஷ்காரர்களின் கல்வித் திட்டத்தை மாற்ற வேண்டுமென்கிறாரோ, எந்த பிரிட்டிஷ்காரர்கள் திட்டத்தை மடத்தனமானது என்று சொல்கிறாரோ அந்தத் திட்டம் தான் நாட்டுக்கு நல்லறிஞர்களை உருவாக்கித் தந்தது என்பதை— ஆற்காடு ராமசாமி யாரையும். அலகாபாத் பண்டிதரையும் சி. வி. ராமனையும். சி. ராஜகோபாலாச்சாரியையும்தந்தது என்பதை அகர்வால் அடியோடு மறந்துவிட்டார்—மாற்றம் வேண்டுமாம் கல்வித் திட்டத்தில்! — மாற்றத்தை யாரும் விரும்பத்தான் செய்வார்கள், முன்பைக் காட்டிலும் நற்பயன் பெறலாமென்று எண்ணி! மாற்றம் என்பதற்காக காபிக்குப் பதிலாக கள்ளையும், காட்டு முல்லைக்குப் பதிலாக கனகாம்பரத்தையுமா ஏற்றுக் கொள்வார்கள்!

## வசிய மொழி

வடக்கத்தி வல்லவர்கள் சில நாட்களாக தென்னாட்டார் மத்தியில் வசிய மருந்து கலந்த வார்த்தைகளை தூவி வருகிறார்கள். நேரு முதல், சென்னை—சென்ட்ரல் ஸ்டேஷனில் இறக்குமதி செய்யப்படும் இந்தி மொழி ஏஜண்டுகள் வரை தமிழின் பால் பற்றுள்ளவர்கள் போல் பேசுவதை நன்கு புரிந்து கொண்டார்கள் தமிழர்கள். வாளால்சாதிக்க முடியாததை வஞ்சகத்தால் சாதித்துக் கொள்ளும் அவர்கள் பண்பு, அதிகார மிட்டு வெற்றிகொள்ள முடியாததை அடுத்திருந்து வெற்றி கொள்ளும் 'பச்சை துரோகம்' திராவிடர்கள் அறியாதவைகளல்ல. பூவின் மறைவிலே நாகமும் புன்னகையின் இடுக்கிலே விஷமும் இருக்கத்தான் செய்யும் என்பதை தமிழர்கள் அறிந்து வெகு நாளாயிற்று. ஆனாலும் அகர்வால் தென்னாட்டினருக்கு போதை ஊட்டிப் பார்க்கிறார், "தென்னாட்டினர், வடநாட்டினரைக் காட்டிலும் இந்தி நன்றாகப் பேசுகிறார்கள்—இன்னும் கொஞ்ச நாளில் வடவருக்கு இந்தி போதிக்கு மளவுக்கு இந்தி கற்றுக் கொண்டு விடுவர்" என்று

இந்தி நன்றாகப் பேசுகிற அந்தத் தென்னாட்டவர்கள் யார்? ஆசானாகக் கூடிய அளவுக்கு வளர்ந்துவரும் அந்த வர்க்கம் எது? அகர்வால் அறிவார் இதை! அரசாங்க உத்தியோகத்தை பரம்பரை பரம்பரையாக பாத்யதை கொண்டாட நினைக்கும் கும்பல் எதுவோ, சதவிகிதத்தில் நாம் குறைவாக இருந்தாலும் சர்வ அதிகாரமும் நமக்குத்தானே சொந்தமாக இருக்கவேண்டும்; அதற்கு, பொதுமொழி யாகிய இந்தியைக் கற்றுத் தானே ஆகவேண்டும் என்று எண்ணுகிற கூடாரம் எதுவோ, அந்தக் கூட்டத்தினர் தான் இந்திமொழி கற்று வருகிறார்கள் என்ற உண்மையை அரசியல் நுணுக்கம் அறிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். உண்மையிலேயே தென்னாட்டார் இந்தி மொழியை விரும்பியிருந்தால் மொத்த ஜனத்தொகையில் பாதியாவது இந்தியைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டுமே. 39 லட்சம் பேர் தானே சர்க்கார் கணக்கு காட்டுகிறது. அந்த 39 லட்சம் பேர் தென்னாட்டு ஜனத் தொகையில் 10சதவீதம்கூட இல்லையே! தென்னாட்டார் இந்தி கற்கிறார்களாம்—விரைவிலேவடவர்க்கும் ஆசிரியர்களாக வந்துவிடுவார்களாம்! அப்பப்பா, என்னஜாலம்! என்ன சாகசம்!

[ 8-ம் பக்கம் பார்க்க ]


வட ஆற்காடு மாவட்ட
தி. மு. கழக மாநாடுகள்

ஜூன் 19, 20,ம் தேதிகளில்
வேலூரில் நடைபெறும்

சமூக சீர்திருத்த மாநாடு
தலைவர்
ஈழத்தடிகள்
திறப்பாளர்
இரா. நெடுஞ்செழியன்

அரசியல் மாநாடு
தலைவர்
கே. ஏ. மதியழகன்
திறப்பாளர்
நாஞ்சில் மனோகரன்

ஓவியக் கண் காட்சித் திறப்பாளர்
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

வரவேற்புக்குழுத் தலைவர்கள் :—மா. பா. சாரதி எம்.சி,, எ. எல். சி. கிருஷ்ணசாமி,
செயலாளர் :—வி. ஆர். ஆதிமூலம், போளூர் சுப்ரமணியம்
பொருளாளர் :— வி. எஸ். ரங்கநாதன்

இரு நாட்களிலும் புதுமை நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரின் ' அம்மையப்பன் ' ' சந்திரமோகன் ' நாடகங்கள் நடைபெறும்

[redacted]

# தலையங்கம்

சென்னை (11—6—54) வெள்ளி

## 'நீரோ'க்கள் வேண்டாம்!

மனிதர்களாக இருக்கும் போழ்து நடக்காத விருந்துகளும், வரவேற்புகளும், கேளிக்கைக் கொண்டாட்டங்களும், மந்திரிகளான பிறகு பெருமளவுக்கு நடைபெறுகின்றன. அந்த வரவேற்பு விழாக்களை நடத்துவோர், நூற்றுக்கு ஒருவர் இருவர் வேண்டுமானால் மனதார பாசத்தின் காரணமாக—பழைய அன்பின் காரணமாக அவ்விழாக்களை நிகழ்த்துவரே தவிர—மற்ற விழாக்கள் அனைத்தும் ஏதோ ஒரு "அடிபோடும் திட்டத்தை" மையமாக வைத்து செய்யப்படும் ஏற்பாடுகளேதான் என்பதை நாம் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்—ஏடுகள் மூலம்! மேடைகள் வாயிலாக! பல்வகைப் பதார்த்தங்கள்—அவைகளினிடையே பாராளும் மந்திரிகள்—துடியிடையார் நடனங்கள்—ஆடல்கள்—பாடல்கள்—இவையெல்லாம் ரோம் எரியும் போது பிடில் வாசித்த நீரோவின் கதையை நினைப்பூட்டுவன என்று சுட்டிக் காட்டியும் இருக்கிறோம். அப்போதெல்லாம் விருந்து நடத்தும் பெரிய மனிதர்களும், அந்தத் தனிப்பட்டவர் இல்லத்திலே உண்டு மகிழும் ஊராள வந்தவரும் நம்மைப் பார்த்துச் சீறினர். தனிப் பட்டோர், நண்பர்களாயிருப்பின் அவர்தம் வீடுகளிலே மந்திரிமார் சென்று விருந்துண்ணுவதிலே யாருக்கும் தடையில்லை. அந்த விருந்துகள் பெரும் ஆடம்பரங்களாய் நடை பெறுவதும், அவைகளை நடத்துவோர் ஏதோ சில பல லாபங்களை எதிர்பார்த்து மந்திரிகளை அழைப்பதும்—ஏழையின் உள்ளத்தை எரிமலையாக்கியே தீரும் என்பதை எச்சரித்தோம். மன்னிக்க வேண்டும்; எரிமலையாகிப் போய் பொங்கி வழியும் ஏழையின் உள்ளம் பூகம்பமாகவும் மாறும் என்பதை எடுத்துக் காட்டினோம். நாமெல்லாம் கூறும்போது நஞ்சாகக் கசந்தது அந்த வார்த்தை. நாமோ-வயிற்றுக் கூப்பாட்டால் வாடிக் கதறும் கோடிக்கணக்கான கண்ணீர்த்துளிகளின் சார்பாக அந்த எச்சரிக்கையை விடுத்தோம்-அக்தக் கேள்விக்குறியை எழுப்பினோம்.

நாடெங்கும் நாசம் விளையாடுகிறது—ஆளவந்த உமக்கோ ஆனந்தம்—ஆட்ட பாட்டம் அழகா இது! முறைதானா? என்ற கேள்விகள் அடுத்தடுத்துக் கிளம்பின—அதுவும் புயல்வேகத்தில்! அப்போதெல்லாம் அலட்சியப்படுத்தினார்கள்—இப்போது அறிக்கை விடுக்கிறார்கள். ஆம்; காங்கிரஸ் பொதுக் காரியதரிசி, பல்வந்த்தராய் மேத்தா அவர்கள், பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கும், சட்டசபை காங்கிரஸ் தலைவர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறார். அதாவது—

"மந்திரிகளையும், உயர்தர அதிகாரிகளையும் கௌரவிப்பதற்காக நடைபெறுகிற பொதுஜன வரவேற்புகளைத்தவிர வேறுபல தனிப்பட்ட வரவேற்புகளும் அடிக்கடி நடத்தப்படுகின்றன என்று புகார்கள் அ. இ. கா. க. வுக்கு வருகின்றன. இம்மாதிரியான வரவேற்புகளில் ஏராளமான பணம் வாங்கப்படுகிறது. விருந்துகளும், கேளிக்கைகளும் அதிகமாகி விடுகின்றன. சில சமயங்களில் அதிகாரிகளையும், மற்ற பெரிய மனிதர்களையும் முகஸ்துதி செய்வதற்காகவே தவிர, வேறு எந்த விதமான பொது நோக்கமும் இம்மாதிரி வரவேற்புகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சில சமயங்களில் வேறு ஏதோ குறிப்பிட்ட நோக்கத்தை வைத்துக் கொண்டு, சில கோஷ்டியினர் வர வேற்புகள் அளிக்கிறார்கள்.

மந்திரிகளையும் அதிகாரிகளையும் கௌரவிப்பதற்கு பொது வரவேற்புகள் போதும். கூடுமான வரையில் தனிப்பட்ட வர வேற்புகளை ஒதுக்கி விடலாம்"

இந்த அறிக்கையைத்தான் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி தோழர் மேத்தா அவர்கள் விடுத்துள்ளார். இதிலே காணப்படும் வாசகங்கள், காங்கிரஸ் கட்சியை ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக போடப்படும் திரையாகத் தெரிகிறதே தவிர — ஏழைகளின் அணிவகுப்பிலே நிற்பவனின் கம்பீரமான குரலாக — பாட்டாளி வர்க்கத்தின் படை வரிசையிலே நிற்பவனின் கண்டனத் தொனியாக நமக்குக் கேட்க வில்லை. அப்படி உள்ளத்திலேயிருந்து கிளம்பிய உணர்ச்சிப்பிரவாகமாக இருந்திருக்குமேயானால் அறிக்கையின் வேகமே வேறு மாதிரி இருந்திருக்கும். காங்கிரஸில் உள்ள மந்திரிகளே! கனம்களே! பெரிய மனிதர்களே! பிரபுக்களே! கொஞ்சம் ஜாக்ரதையாக நடந்து கொள்ளுங்கள் — அதிருப்தி வளர்கிறது — அபாயம் பெருகிவிடலாம் — ஆகவே கூடுமான வரையில் தனிப்பட்டோர் நடத்தும் விருந்து வைபவங்களை ஒதுக்கிவிட முயலுங்கள் — என்ற தோரணையிலே தான் மேத்தாவின் அறிக்கை பேசுகிறது. "மந்திரிகளையும் அதிகாரிகளையும் கௌரவிக்க, பொது வரவேற்பு போதும்." என்று ஒரு வாசகம் இருக்கிறது மேத்தாவின் அறிக்கையிலே!

புண்ய பாரதத்தின் மந்திரிகளும் அதிகாரிகளும், பொது வரவேற்பு என்று எதைக் கருதுகிறார்கள்! சேரியிலே தோரணங் கட்டி வரவேற்கிறானே, அதையா? இல்லை—அதுதான் இப்போது நடப்பதில்லையே அவர்கட்கு—நடந்தாலும் பிடிப்பதில்லை.

வடபாதி மங்கலத்தார் வீட்டிலே—குன்னியூர் மாளிகையிலே டாட்டா, டால்மியாக்களின் அரண்மனைகளிலே—குபேரபுரியினரின் விருந்து மண்டபங்களிலே — நடைபெறுவதைத்தான் "நமது" மந்திரிகள் விருந்தாகக் கருதுகிறார்கள். வைரக் கடுக்கன்களும், நவரத்தின மாலைகளும், பட்டுபீதாம்பரங்களும், ஒளிவிடும்—உல்லாசக் கோட்டங்களிலே தான் பொது மக்கள் குழுமியிருப்பதாக புண்யபாரத மந்திரிகளும், அதிகாரிகளும் கருதுகிறார்கள். ஏன்; தோழர் மேத்தாகூட அவர்களைத்தான் பொது மக்கள் எனக்குறிப்பிட்டாலும் குறிப்பிடுவார். பொது மக்கள்சர்க்கார் என சொல்லப்படும் இந்த சென்னை அரசாங்கத்தில் தானேஏழை பங்காளர் நேரு வருகை தந்த போது ஒரு லட்சம் வெண் பொற் காசுகள் வரவேற்பு செலவுக்காக வாரி இறைக்கப்பட்டன. பொது மக்களின் அரசாங்கத்திலேதானே; பொது மக்கள் உழைத்து, வியர்வை உதிர்த்து, அந்த ரத்த வியர்வையைப் பணமாக்கித் தரும் வரியை, காசி ராமேஸ்வரம் யாத்திரை செல்ல ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் செலவிடுகிறார். விருந்தும் கேளிக்கையும் மட்டும் தானா இந்த விதியற்றோர்—விழியிலே, அழுவதற்கும் நீரற்றுப் போனோர்—நாட்டிலே நடை பெறுகிறது என காங்கிரஸ் காரியதரிசி எண்ணுகிறார்.

கடவுள் பெயரால்—மதத்தின் பெயரால் — மந்திரிமார்கள், மயிலை கபாலீஸ்வரரை தரிசிப் பதிலிருந்து, மாபெரும் தேவர் திருநாள் கும்பமேளாவில் கலந்து கொள்வது வரையிலே யாருடைய பணம் செலவழிக்கப் படுகிறது? புரியாதா மேத்தாவுக்கு?

அதிருப்தி வளருகிறதாம்—அதன் அடையாளமாகப் புகார்கள் வருகிறதாம்! தோழர் மேத்தா அறிக்கை மூலம் பேசுகிறார். இதிலே மட்டிலும் தானா அதிருப்தி? இதுபற்றி மட்டும் தானா புகார்? இதோ சிங்காரச் சென்னையிலே செழிப்பு திகழ் பூமியாம் கிண்டியிலே ஒய்யாரமாக வீற்றிருக்கிறாரே, கவர்னர் பிரகாசா—அவர் பெறும் தொகை எவ்வளவு, ஆண்டு ஒன்றுக்கு? பத்து லட்சம் ரூபாய்! அதிலே அதிருப்தி பிறக்க வில்லையா? புகார் கிளம்பிட வில்லையா? டெல்லித்துரைத் தனத்திலே "லோக் சபா" உறுப்பினர் களாகக் சுருதி மாதச் சம்பளம் நானூறு ரூபாயும் — அதைத் தவிர போக்கு வரத்துக்கு இலவச வசதிகளும் — இன்னும், அன்றொரு நாள் ஆங்கிலப் பிரபுக்களுக்கு இருந்த ஆடம்பரச் சலுகைகளும் — அளிக்கப் பட்டிருக்கிறதே, அதிலே அதிருப்தி கிளம்ப வில்லையா? புகார் முளைத்திடத்தான் இல்லையா? சாவுக் காடாக இருக்கிறது நாடு! அதிலே சல்லாப சுந்தரர்களாகத் திரிகிறார்கள் மந்திரிகள்!

தரித்திர பூமியாகி விட்டது தேசம்! அதிலே குபேர தர்பார் நடத்து கிறார்கள் கோலேந்திகள்! ரோம் எரிகிறது! நீரோ பிடில் வாசிக்கிறான்!

அவனையும் மிஞ்சுகிறார்கள் இந்த "அசோக சக்கரா"கள்! புகார்கள் வருகின்றன எனப் புலம்புகிறார் பொதுக் காரியதரிசி! தும்பை விட்டு வாலைப்பிடிக்கும் தோழனின் நிலைமைதான் நமக்கு ஞாபகம் வருகிறது. புகார்கள் முதலிலே வரும்! அது புகைச்சலின் அடையாளம்! புயல் வரும்பின்னே; புகார்வரும் முன்னே!—என்ற புது மொழியை பொதுக் காரியதரிசி மேத்தா மட்டுமல்ல; புகாருக்கு ஆளானோர் அனைவருமே கவனிக்க வேண்டும். கவனிக்க மறுத்தால்—எரிமலை வெடித்து விட்டது—புயல் வீசி முடிந்து விட்டது—என்ற செய்தியை மட்டுமேதான் வெளி நாடுகள் பெற்றிட முடியும்!—"நீரோக்கள் வேண்டாம்" என்ற முழக்கம் எத்தனையோ முடிகளைப் பொடியாக்கி யிருக்கிறது! நினைவுறுத்துகிறோம் அதை, இந்தப் பீட மேறிகளுக்கும், ஆடம்பரப் பித்த மேறியவர்களுக்கும்!

# சித்தூரார் சிந்தனைக்கு!

மாற்ற வேண்டுமாம்......

சுபிட்சத்தை அணு அணுவாக விளியோகிக்க பல ஆண்டுகள் சிரமப்பட்டு தயாரித்த உருப்படாத ஐந்தாண்டு திட்டத்தையல்ல—தலை நகரையே மாற்ற வேண்டுமாம்—இப்படி கூச்சல் எழுப்புபவர்கள் ஆந்திரச் சோதரர்களல்ல; இது அவர்களைப் பிடித்திருக்கும் நீங்காத பிணி என்று ஒதுக்கி விட! டில்லி பாராளு மன்ற உதவி சபாநாயகர் அனந்த சயனம் அய்யங்கார்தான் இப்படி திருவாய் மலர்ந்திருக்கிறார்!

பன்னிருகையும் பக்கத்துக்கொரு மங்கையும் கொண்ட கார்த்திகேயன் தெய்வயானை வீட்டிலும் – வள்ளியம்மாள் வீட்டிலுமாக கிரஹ மாற்றம் செய்வாரே; அதைப் போல பாரத் வருஷத்தின் பாராளு மன்றத்தை ஒவ்வொரு ஆண்டிலும் சிற்சில மாதங்களுக்கு பெங்களூரிலாவது— ஐதராபாத்திலாவது கூட்ட வேண்டுமாம்.

திடீரென்று உதயமாகவில்லை இந்த திட்டம்—சிறிது கால மாகவே சித்தூர் அனந்த சயனம் இப்படி உபதேசித்துக்கொண்டு தான் இருக்கிறார். அதுமட்டுமல்ல அரசாங்கத்தின் சில இலாக்காக்களை பெங்களூருக்கே நிலையாக மாற்றிவிட வேண்டுமாம். இந்த யோசனையும் சித்தூரார் சிந்தியதுதான்!

“டில்லி மாநகரம் சாம்ராஜ்யங்களின் சுடுகாடு; சைன்ய பல மிக்க மௌரிய அரசுமாண்டதும் அங்கேதானே; மேனி வாடாமல் பிரஜைகளின் இரத்தத் தடாகத்தில் வல்லரசுத் தோணியை மிதக்கவிட்ட மொகலாய வம்சத்தையே விழுங்கி ஏப்பமிட்ட பாவ பூமியாயிற்றே அது! அந்த சவக்குழியை அஸ்திவாரமாகக் கொண்டு எழுப்பப்பட்ட இந்தியக் குடியரசின் பாராளு மன்றத்தை அங்கிருந்து மாற்றி விடுங்கள்; நான்கைந்து தலைமுறைக்குமேல் அங்கு எந்த அரசும் நிலைத்ததில்லை: இதுதான் வரலாறு நமக்கு சித்தரிக்கும் சோகச் சித்திரம். எனவே சரித்திரம் மீண்டும் அலங்கோலத்துடன் திரும்பாமலிருக்க உடனே கிரஹமாற்றம் செய்யுங்கள்” என்று இந்தியக்குடியரசுஜனித்த நட்சத்திரத்தைக்கணித்து சித்தூரார் நமக்கு காரணம் காட்டவில்லை; தென்னாட்டு மக்களிடம் எழுந்து விட்ட பிரிவினை மனப்பான்மையை ஒருவாறு மூடி மறைக்க — “தொலைவில் இருக்கிறோம்; தொல்லைகள் அனுபவிக்கிறோம்” — என்கிற முணகல் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் இந்த ஏற்பாடாம்—சித்தூரார் இப்படி காரணம் காட்டுகிறார்; தென்னாட்டிலே வளர்ந்து வரும் ஒரு இயக்கத்தின் இருதயத் துடிப்பை — வடநாட்டு ஆதிபத்யத்தை பொசுக்குவதற்காக திராவிடத்தில் புகைந்து கொண்டிருக்கும் பெரு நெருப்பை — சித்தூரார் ஓரளவு உணர்ந்து கொண்டதின் விளைவுதான் இது!

அந்த அளவுக்கு அனந்த சயனம் நம் பாராட்டுகளைப் பெறுகிறார் “பாகிஸ்தான் பிரிந்தே தீரும் — அதுதான் நியாயமுங்கூட”— என்று முன்பொருநாள் ஆச்சாரியார் ஆரூடம் கூறியதைப் போல—இப்போது அனந்த சயனம் திராவிடத் தனியரசுக் கோரிக்கையை நன்முகப் புரிந்து கொண்டிருக்கிறார்; எனவே மற்ற காங்கிரஸ் தலைவர்களைப் போல ஆத்திர மொழிகளை அள்ளிக் கொட்டாமல் அர்த்தம் பொதிந்த தத்துவத்தை சூசகமாக வட நாட்டுத் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

திராவிடர் இயக்கத்தின் வருங்காலத்தை தீர்க்க தரிசனத்தால் புரிந்து கொண்ட அய்யங்கார் கடந்த கால சரித்திரத்தை மறந்து விட்டார்.

தலைநகரை மாற்றும் இந்தக் கொள்கை, துக்ளக் காலத்திலிருந்து தொத்து நோயைப்போல பின்னரும் தொடர்ந்து கொண்டேஇருக்கிறது. டில்லியிலிருந்து கல்கத்தாவிற்கு அரசாங்க அலுவலகங்களை மாற்றி தோல்வி கண்டார்கள் ஆங்கிலேயர்கள். அது மட்டுமல்ல; ஆங்கில கவர்னர் ஜெனரல்களும், வைசிராய்களும் கோடையின் கொடுமையை தாங்கமுடியாமல் சிமலாவிற்கும், டார்ஜிலிங்கிற்கும் டோராவைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். அப்போதெல்லாம் இந்த கதர்வாலாக்கள் சும்மாவா இருந்தார்கள்?

“கொள்ளை போகிறது பாரீர், பாரத புத்ரர்களின் வரிப்பணம்! கோலாரிலிருந்து சுரண்டிய தங்கக் கட்டிகளை யெல்லாம் இப்படி தலைநகரை அடிக்கடி மாற்றி ஓட்டாஞ்சல்லியாகச் செலவிடுகிறார்களே; வாளாயிருப்பதா, நாம்? கேளாக் காதினரா இந்தியப் பெருங்குடி மக்கள்?” —என்று இமயமுதல் குமரிவரையுள்ள காங்கிரஸ்காரர்கள் போர்ப்பரணி பாடினார்கள். பாரதமாதாவை வளைத்திருக்கும் முப்பெருங்கடலும் அடங்குமாறு கண்டன ஓசையைக்கிளப்பினார்கள். அந்த மகாஜனத்துள் ஒருவரான அய்யங்காரே தயக்கம் ஏதுமில்லாமல் இப்போது சொல்லுகிறார், “இதற்காக ஏற்படும் செலவினங்களை சர்க்கார் பொருட் படுத்தக்கூடாது” என்று.

முன்பு வெள்ளைக்காரன் அலுவலகத்தை மாற்றியபோது ஆட்சேபம் தெரிவித்த கட்சியைச் சேர்ந்தவர், இப்போது அதே வேலையை திரும்பவும் நடத்தச் சொல்கிறார்; வரலாற்றை மக்கள் மன்றம் மறந்திருக்கும் என்கிற நினைப்பில்!

தலை நகரை மாதத்துக்கு ஒரு முறை மாற்றியமைக்கும் கொள்கையை—திருவிடத்தார் மட்டுமல்ல; இந்திய உப கண்டத்திலுள்ளமக்களனைவரும் எதிர்த்தே தீருவார்கள்—நல்ல இதயம் படைத்தவர் எவரும் தன் இச்சைப்படி வரிப்பணத்தை செலவிட அரசாங்கத்தை அனுமதிப்பது கிடையாது.

இந்திய உபகண்டத்தின் வாக்காளன் என்ற முறையில் நாமெல்லாம் சித்தூராரின் இந்த யோசனையைக் கண்டிக்க வேண்டியவர்களாகிறோம்.

அனந்தசயனம் திராவிட இன உணர்ச்சியை நன்முகப் புரிந்து கொண்டவர்; இருந்தும் அந்த சுதந்திர வேட்கை பாராளு மன்றத்தை தெற்கே மாற்றுவதாலேயே அடங்கிவிடக்கூடியது என்று எண்ணும்போதுதான் நம் அனுதாபத்திற்கு பாத்திரமாகிறார். திராவிட நாடு கோருபவர்கள் “வண்ண நிலவை பிடித்துத்தா” என்றுஅழும் குழந்தைகளல்ல; வர்ணப் பூவைக்காட்டி வாயை மூடிவிட! தான் போவது துக்லக்கின் பாதையென்பது தெரிந்திருந்தும் திராவிடநாட்டு உதயத்தை தான் கூவாமலிருப்பதால் ஒத்திவைக்க முடியுமெனக் கருதும் சேவலாகிறார் அய்யங்கார் கம்யூனிஸ்டுகள் கொஞ்சகாலம் மலைமைக் கழகத்தை சென்னையிலே அமைத்து பின்னர் மறுபடியும் டெல்லி நகருக்கே முகாமை மாற்றி விட்ட நிகழ்ச்சியை சித்தூரார் சிந்தனைக்கு கொண்டு வர விரும்புகிறோம் — வான மண்டலம் வரை உயர்நோக்கி நிற்கும் விடுதலை வேட்கையும், சாணக்கிய தந்திரத்தால் தடைபட்டது கிடையாது என்கிற உண்மையையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்!

## முரசொலி

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 6-0-0 |
| ஆறு மாத சந்தா | ரூ. 3-8-0 |

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

## ஒன்றே சொன்னார்— நன்றே சொன்னார்!

“மனை வெறுக்கிறது, மயானம் அழைக்கிறது; இருந்தும் அவர் ஊர் ஊராகச் சுற்றுகிறார், உபத்திரவ மடைகிறார். ஏன்? ஏழைகள் மீது அவ்வளவு பற்று அந்த மகானுக்கு — பராரிகளிடம் அத்தனை பரிவு, பாசம், ஈகை, இரக்கம் அந்த புண்ணியஸ்தருக்கு” என்று தான் பேசுகிறார்கள், விநோபாபாவேயின் பூமிதான இயக்கம் குறித்து.

ஆனால் பாவேயின் உள் நோக்கம் எப்படி யிருந்தாலும், நிலம் கொடுக்கும் அந்த நிலப்பிரபுக்கள் நல்லெண்ணத்தோடு கொடுக்கவில்லை என்பதை இரண்டோரு முறை நாம் சுட்டிக் காட்டி சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வு சமதளப்பட்டு விடாது என்று விளக்கி யிருக்கிறோம். இதையேதான், “பூமிதான இயக்கத்தின் மூலம், ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவம் உருவாகும் என நான் நம்பவில்லை” என்று பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் ஆச்சார்ய நரேந்திரராவ் புனவில் பத்திரிகை நிருபரிடம் கூறியிருக்கிறார். பணத்தை அள்ளிவீசி வெள்ளையர் காலத்தில் பட்டத்தைப் பெற்றதைப் போலத்தான், இப்போது ஆகாத தரிசு நிலங்களைத்தந்து ‘ஏழைப்பாங்காளர்’ என்ற முத்திரையைப் பெறுகிறார்கள் என நாம் கூறினோம். “நஷ்டஈடின்றி இழப்பதைவிட நிலத்தில் ஒரு பகுதியை தானமாகக் கொடுக்க நிலச்சுவான்தார்கள்கள் முன்வருகிறார்கள்” என்று நரேந்திரர் சொல்கிறார். இரண்டுக்கும் வேறுபாடு அதிகமில்லை. ஆனால் நாம் ஒன்றை கூடுதலாகக் கேட்கிறோம்; “சேகரித்த நிலங்களை எப்படிப் பிரிக்கப் போகிறார்கள்? அதற்கான திட்டமெங்கே?” என்பதாக. இதை நரேந்திரர் நாளை கேட்பார்-இருந்தாலும் இன்று சொன்ன ஒன்றையே நன்றாகச் சொல்லிவிட்டார். ‘புது வாழ்க்கைத் தத்துவம் உருவாகாது’ என்று.

# புதிய பாகவதர்!

★

பழைய சுயமரியாதைச் சிங்கம். பகுத்தறிவுப் பிரச்சாரப் படையின் தூதுவர். நாடு வாழ, மதக் கேடு போக்க வேண்டுமென்று—ஏடுகள் பலவற்றின் ஆதாரங் கொண்டு—காடு மேடு சுற்றிக் கனல் கக்கப் பேசியவர். பெரியார் ராமசாமியின் சுயமரியாதை உலைக்கூடத்தில் தயாரான போர்வாள்! ஆம்; ஜீவானந்தம் என்றாலே, அன்றொரு நாள் ஆரியக் கோட்டம் அஞ்சி நடுங்கியது. சமுத்திரத்தின் கொந்தளிப்பு போன்ற உணர்ச்சியும்—கோடையிடி போன்ற தொனியும்—தோழர் ஜீவாவின் எழுச்சிமிக்க சொற்பொழிவுக்கு அரண். அவரது வீர உரைக்கு முன்னே கடவுளா? மதமா? கற்பனைப் புராணமா? கம்பராமாயணமா? கத்தரிக்காயா? எல்லாம் தூள்! தூள்!! இவையெல்லாம் திருத்துறைப்பூண்டி சுயமரியாதை மாநாட்டுடன் சரி, என்ற அளவோடு அவரது பொது வாழ்வு முடிந்துவிடவில்லை. திருத்துறைப்பூண்டி அவருக்கு இயக்க அமைப்பு முறையிலே அபிப்பிராயபேதத்தைவளர்த்து, அவர் வெளியேறிடக் காரணமாயிருந்ததே தவிர—சுயமரியாதைக் கொள்கைகளிலே அவருக்கு கசப்பு ஏற்பட்டது என யாரும் கூறமுடியாது. காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் அங்கமாக சில நாள் பணியாற்றினார்; அப்போதும் அவர் சுயமரியாதைக் கொள்கைகளை வெறுத்தார் என சொல்வதற்கில்லை. அதன் பின்னர் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தலைவர்களில்ஒருவராக மக்களால் மதிக்கப்பட்டார். இப்போதும், மக்களால், அவர் கம்யூனிஸ்டு கட்சி தலைவராகத்தான் மதிக்கப்படுகிறார்.(கட்சி எப்படிக் கருதுகிறதோ—தெரியவில் லை!) ஏழெட்டு ஆண்டுகட்கு முன்னர் ஈரோட்டிலே காரை வாய்க்கால் மைதானத்திலே அவர் பேசும் போது–கம்யூனிஸ்டு கட்சிக் கொள்கைகளோடு — கடவுள் பற்றிய தெளிவுரையும் தந்தார். ஆலயங்களிலே பூச்சி புழுக்களால் சூழப்பட்டுள்ள அனுதாபத்திற்குரிய ஆண்டவன்களை அவருக்கே உரிய பாணியிலே கிண்டலும் செய்தார். மக்கள் அப் பேச்சு கேட்டு ஆரவாரம் செய்தனர் ஆனந்த மேலீட்டால்!

"எங்கு சென்றாலும் உன்னை மறவேனே!" என்று தோழர் ஜீவானந்தம், சுயமரியாதைக் கொள்கையிடத்திலே தனக்குள்ள ஆழ்ந்த பாசத்தை வெளிப்படுத்திக் காட்டினார்.

அந்தோ-அந்த ஜீவானந்தம், **இன்று பாகவதராகி விட்டார்!** இராமேஸ்வரத்திலே அவர் பேசினாராம்—பேசும்போது ஆழ்வார்கள் நாயன்மார்கள் பிரபந்தங்களில் இருந்து மேற்கோள் காட்டி அவர் பேசியது பெரிதும் ரசிக்கத் தக்கதாயிருந்ததாம்—"சுதேசமித்திரன்" எழுதுகிறது இப்படி!

பரமக்குடியிலே,**கம்பன்கண்ட தமிழகம்-கம்பன் கண்ட கவிநயம்-**கம்பனின் சொற்சித்திரம்-கம்பனிலே கம்யூனிசம்—என்றெல்லாம் பேசியிருக்கிறார்.

இங்கர்சாலின் கொள்கைகளைப் பேசினார் — பின்னர் மார்க்ஸ் சித்தாந்தங்களை விளக்கினார் — லெனின் திட்டங்களைச் சொன்னார் — கடைசியில் சந்தனம் தடவிய கையை சாக்கடை ஜலத்திலே நனைத்தார் என்று தோழர் ஜீவாவின் பொதுவாழ்வுப் பயணத்திலே ஒரு சனாதன வைதீகத் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு கட்சிக்கு கிடைத்துள்ள நல்ல கேடயம் தோழர் ஜீவானந்தம். அந்தக் கேடயத்தைக் கையிலேந்தி மாற்றுக் கட்சிகள் மீது மண்ணைவாரி வீசிடும் விளையாட்டில் அந்தக் கட்சி அடிக்கடி ஈடுபடுகிறது. எதிர் முகாம்களிலிருந்து சீறிவரும் கணைகளை தன்மீது படாமல் தன் கேடயத்தின் மீது மோதிடச் செய்யும் நரித்தந்திரிகள் கம்யூனிஸ்டு பாசறையிலே பலர் உளர். அப்படிக் கேடயம், தாங்கியிருக்கிற கணைகள் அதிகம். உடைந்தால் கேடயத்தோடு தொலையட்டும் — நாம் தப்பித்துக் கொள்வோம் என்று சர்வ தேசம் பேசும் சில சாணக்கிய மூளைகள், சமருக்கு உபயோகிக்கும் கேடயமாக ஆகிவிட்டார் மதிப்பிற்குரிய தோழர் ஜீவா!

கேடயத்திலே ஏற்பட்ட பலமான வெடிப்புத்தான் கம்பராமாயண காலட்சேபத்திலே கொண்டு வந்து தோழரை நிறுத்தியிருக்கிறது. மார்க்ஸின் கொள்கைகள் – அதைக் கோபுர மேற்றிட லெனின் தாங்கிய கொடுமைகள் — இவைபற்றி இனிமேல் தோழர் ஜீவா அதிகம் பேசமாட்டார் போலும். கம்பனின் ராமனுடைய திருக்கல்யாண குணங்கள்—அந்த ராமனின் தேவி சீதாவின் அங்க லக்ஷணங்கள்—அதை வர்ணிக்கும் போது கம்பர் கொட்டியுள்ள தெய்வீகத் தமிழ்த் தேன் துளிகள்—அந்தத் துளிகளிலே ஜீவா காணும் சுவை! அந்த சுவை கேட்டுப் பயன் பெற வேண்டுமென்று காத்திருக்கும் அவை! இப்படி அமைகிறது பழைய சுயமரியாதைப் புலியின் புதிய பொது வாழ்வு. வாழ்வின் இறுதிக் கட்டத்திலே–சாகும்போது "சங்கரா, சிவா!" என்று கூவிச் சாவோம் என்று பாபத்தின் மொத்த வியாபாரிகள் சிலர் கூட வெளிச்சம் போடக் கிளம்புவார்கள். நண்பர் ஜீவானந்தமும் "சிவசங்கரா! சீதா மணாளா!" என்றெல்லாம் பாகவதர் கோலத்திலே பாடிடக் கிளம்பி விட்டார் — பொது வாழ்வின் இறுதிக் கட்டம் யாருக்கும் இப்படி அமைந்திடக்கூடாதுதான். ஆனால் ஜீவாவுக்கு அமைந்திடுகிறது! அமைகிறதா? — அல்லது அவரே அமைத்துக் கொண்டிருக்கிறாரா — என்ற ஐயம் நம்மைத் துளைக்கிறது. கல்லூரியிலிருந்து வெற்றி முகத்துடன் வெளியேறும் மாணவன் "ஹரி நமோத்து சிந்தம்" படிக்கப் போகிறேன் என்று பாலர் பள்ளியில் புகுந்தால் சிரிக்கத்தான் செய்வோம். மார்க்ஸ் வரையில் போய்–மாஸ்கோ மணத்தை நுகர்ந்த தோழர்–மகான் மகாத்மியம்–மகேசர் மகிமை–நாயனார் மொழிகள்–ஆழ்வார் உரைகள்—என்ற படுபாதாளத்திலே "பாரசூட்" உதவியின்றி விமானத்திலிருந்து குதிக்கிறார் என்றால் சிரிக்கமட்டும் முடியவில்லை நம்மால்! சிந்தித்திடவும் வேண்டியவர்களாகிறோம்—அவர் வாழும் கோட்டத்திலே அவரைச் சாய்த்திடும் சதிகள் ஏதோ உருவாவது போலவும், ஆகவே போக்கிடமின்றி புராண காலக்ஷேப பாகவதராய் மாறிட வேண்டுமென்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டது போலவும் நமக்குத் தோன்றுகிறது.

சந்தேகம் வேறு திசையிலும் பலமாகிறது நமக்கு!

காமராசரை கடுமையாக எதிர்க்கிறது கம்யூனிஸ்டு கட்சி!

**கல்வித்திட்டம் ஒழிக்கப்பட்ட நிகழ்ச்சியை—அந்த மகிழ்ச்சியை அலட்சியப் படுத்துகிறது கம்யூனிஸ்டு கட்சி!**

**ஆச்சாரியாரை மறை முகமாக ஆதரித்தது கம்யூனிஸ்டு கட்சி!**

**இன்று ஆச்சாரியார் கல்கியிலே ராமாயண விளக்கம் எழுதுகிறார்—ராமமூர்த்தியின் கட்சியும், ராமாயண காலட்சேபத்துக்கு ஜீவானந்த பாகவதரை நாடெங்கும் அனுப்புகிறது. இது என்ன புதிரோ — யார் கண்டது! — இனி கிருபானந்த வாரிகளுக்கு "சான்ஸ்" கிடையாது! ஜீவானந்த பாகவதர் புறப்பட்டுவிட்டார்! — போகப் போகத் தெரியும் புதிய பாகவதரின் போக்கும் – நோக்கும்!**

## நருணநிதி நிகழ்ச்சிகள்

★

ஜூனின்

8 முடிய தஞ்சை மாவட்டம்

10 சிறு மதுரை

11, 12, காஞ்சில்

13 உடையார் பாளையம் வேலாயுதம் மகளின் திருமணம் (ஜெயங் கொண்டான்)

,, இரவு—சென்னை நாடகம்.

14 முதல் ஓய்வு .

### சூளுரைக்கிறார்!

திராவிட இயக்கத்தவரிடம் அந்த ஆணவமிகுந்த வர்ணாச் சிரமத் தலைவன் — ஆச்சாரியார் — தோற்றார் — ஒரு முறையல்ல — இரு முறை. இனியும் திராவிடரை வம்புக் கிழுத்தால், அன்றும் நாம் அந்த ஆணவக் காரரை மூன்றாம் முறையாகத் தோற்கடிக்கத் தயங்கோம்.



அண்ணா

# நாடு சிரிக்கிறது பண்டிதரே, ★ நாடு சிரிக்கிறது! ★

நள்ளிரவில்——

கள்ளர்களின் ஆட்சி நேரத்தில் —

படை ஒன்று புறப்பட்டதாம்—பத்திரிகைகள் கூறுகின்றன—முதல் பக்கத்திலே—முக்கிய இடத்திலே!

வேலும் வாளும் எடுத்து போர்க்களம் நோக்கியல்ல; தடிகளும் உலக்கைகளும் ஏந்தி மயானம் நோக்கி!

கள்ளர்களைத் தேடும் நல்ல நோக்கோடு அல்ல; யமதர்மனுக்கு பூஜையிடும் ஏமாளி எண்ணத்தோடு!

சிரிக்கத் தோன்றும், "சரிந்துவிட்ட சமுதாயத்தில் இப்படியும் ஒரு சீர்கேடா?" என்ற. சிரிப்பை சீற்றமாக்க செய்தி நீளுகிறது—கேளுங்கள்.

படையிலே அங்கம் வகித்தோர் 'பயிர்ப்பு மிக்க பாரதப் பெண்மணிகள்'! படைக்கோலமோ பார்க்க சகிக்காத கோரம்.

நினைக்க நெஞ்சு குலுங்குகிறது—ஐம்பதுக்கு மேற்பட்ட பெண்கள் ஊரடங்கிய நேரத்தில் ஊர்வலம் சென்றிருக்கிறார்கள் —பிறந்த மேனியர்களாக—நிர்வாண நிலையிலே!

ஜோத்பூரிலே நடந்திருக்கிறது இந்த கேடுமதிச் செயல். ஊரிலே உஷ்ணம் அதிகமாம்; அம்மை நோயும் அடியெடுத்து வைக்கலாமாம்; ஆகவே சிசுக்களுக்கு சாவு நேரிடுமாம்; அதைத் தடுக்கத்தான் இந்தத் திட்டமாம்! ஊருக்கு வெளியே மூன்றுமைல் தூரத்திலுள்ள மலையடிவார மயானத்திற்கு நடையாகச் சென்றிருக்கிறது அப்படை — அந்த நாசக் கோலத்தோடு.

'கும்பமேளா' சம்பவத்தை இதற்குள் மறந்திருக்க முடியாது. என்றும் மறக்க முடியாத அந்த விபரீத விழாவிலே ஆயிரக் கணக்கான பக்த கோடிகள் செத்து மடிந்தார்கள், கடவுள் தூதுவர்களின் 'கண்கவர் நடனம்' காணப்போய்.

இந்திய சரித்திரத்தில் மறைக்க முடியாத மாசைப் பொறித்து விட்ட அந்த விழாவை எண்ணி மக்கள் மன்றம் துயரம் அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, இப்படி ஒரு 'குட்டி கும்பமேளா' நடந்திருக்கிறது; இரண்டுக்கும் வித்தியாசம் அதிகமில்லை.

கும்பநகர் கும்பமேளா பட்டப் பகலிலே; ஜோத்பூர் கும்பமேளா நடு நிசியிலே! அங்கே உலகம் துறந்த முனிவர் கூட்டம்; இங்கோ பத்தினிப் பெண்கள் படை!

இந்த வேற்றுமைதான் மற்றொரு படுகொலைக்கு காரணமாவதைத் தடுத்திருக்கிறது! இல்லையேல் உலகத்தில் நாகரிக மிக்க வேறு எந்த நாட்டிலும் காண முடியாத இந்த 'புதுமை'க் கோலத்தைக் காண கோடிக் கணக்கிலே கூட்டம்சூழ்ந்திருக்கலாம்; பெரு நெருக்கடி ஏற்பட்டிருக்கலாம்; போலீசாரும் சோர்ந்திருக்கலாம்; பல்லாயிரவர் மடிந்திருக்கலாம்; கங்கைக் கரை காட்டிய இரத்தச் சகதி தோன்றியிருக்கலாம்! ஆனால், நல்லவேளை, இந்த விழா இருட்டிலே நிகழ்ந்து இத்தகு நாசத்தை நேரவிடாமல் தடுத்திருக்கிறது.

உலக வல்லரசு நாடுகளுக்கு இடையே புகுந்து புகுந்து பறக்கிறது இந்திய 'சமாதானப் புறா'—அந்தப் புறாவின் பிறப்பிடத்தைக்காண—இந்தியாவைக் காண—மற்ற நாட்டினர் போட்டியிட்டுக்கொண்டு வந்துபோகின்றனர். அவர்களின் செவிகளிலே இந்தச் செய்தி விழுந்தால் மகிழவா செய்வர்?

"உலக அரங்கிலே உயரிய பீடம் வகிக்கிறது பாரத நாடு" என்று கதைக்கிறார்கள் ஆட்சி பீடத்தினர். "அதைக் கடுகளவும் குறைத்துக் கொள்ளக்கூடாது" என்று மொழிகிறார் நேரு. நாட்டின் மானத்தைக் காக்க வேண்டிய அந்த 'நல்ல மனத்தினர்'தான் 'காட்டுமிராண்டிகள்', 'பைத்தியக்காரர்கள்' — என்பன போன்ற அநாகரீகச் சொற்களை அடுக்கிப் பேசினர்.

நாம் மறந்திருக்க முடியாது; திராவிடத்தில் நிகழ்ந்த ரயில் நிறுத்தப் போராட்டத்தைக் குறித்து நேரு கூறிய சொற்களை "இந்தியாவிடம் உலகம் கொண்டுள்ள நன்மதிப்பை இம்மாதிரியான சம்பவங்கள் சிதைத்துவிடும்" என்ற வரட்டு வாதத்தை!

ஜனநாயக முறைப்படி நடைபெற்ற தென்னகத்து உரிமைப் போராட்டத்தைக் குறித்து, இப்படி யெல்லாம் ஆவேச மொழிகளைப் பொழிந்தார் நேரு பண்டிதர். ஆனால் தனக்கு வெகு அருகிலேயே, நிகழும் இத்தகையநீசத்தனமான செயல்களைக் குறித்து எதுவுமே பேசுவதில்லை!

நேரு பண்டிதரின் இந்த மௌனம் மக்கள் மன்றத்திலே பெரும் கேள்விக்குறியைத்தான் உருவாக்கி விட்டது. இத்தகைய அநாகரீகச் செயல்களை நேரு வரவேற்கிறாரா? இவைகளினால் நாட்டின் பெருமை உயர்வதாகக் கருதுகிறாரா?

இப்படித்தான் ஊர் கேட்கிறது—உலகம் சிரிக்கக்கூடாதே என்ற நல்ல எண்ணத்தால்! ஃ

---

## கொள்கைத் திருப்பம்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

டால்தான் நிலைமை சரியாகி இருக்கும் என்று! ஆனால் நடந்த காட்சி அப்படியல்ல! அர்த்த ராத்திரியில் அடுத்த வீட்டுப் பெண்மணியை வீடு கடத்தி அடுத்த ஊர் இட்டுச் சென்று தாலி கட்டும் தறுதலையைப் போல-கொஞ்சமும் முன்னறிவிப்பின்றி இந்திக்கு முடிசூட்டியிருக்கின்றனர், மாவ்லங்கர் குழுவினர்.

இந்தி மொழியைத் திணிக்க அவசரப்படக்கூடாது என்று புருஷோத்தமதாஸ் தாண்டன்களை அதட்டிப்பேசிய நேருவின் முன்னிலையில் இந்த பெயர் மாற்றும் வைபவம் நடத்தப்பட்டிருக்கிறது-மூலையில் கிடந்ததற்கு முடிசூட்டியிருக்கிறார் மாவ்லங்கர்!

தென்னாட்டிற்கு வந்துபோகும் அகர்வாலாக்கள், நம்மை குளிர்ப் பேச்சால் மயக்குகிறார்கள்—அங்கே பானம் பருகுங்கள் என்று சொல்லி குளிர் விஷத்தை நமக்கு தருகிறார்கள்.

சாம்சனின் மூல பலத்தை -அவன் திரண்ட முடியை தித்திப்புப் பேச்சால், சாகச நடத்தையால் டிலைலா வெட்டி வீழ்த்தியதைப் போல நம்மையெல்லாம் நசுக்கி இந்திக் கணிகையை இழுத்து வர காங்கிரஸ் மூலஸ்தானம் திட்டம் போட்டுவிட்டது. "மேற்கு வங்கத்தில் சர்வாதிகாரம் ஆட்சி நடத்துகிறது — மக்களின் ஆதரவு பெற்ற பஸ்லுல் ஹக்குக்கு சிறையா? என்னே அக்ரமம்— ஓ, ஜனநாயக மங்கையே, நீ எங்கே ஓடி ஒளிந்து கொண்டாய்—என்று சோக கீதம் எழுப்பும் பத்திரிக்கைகள் நாற்பது கோடி மக்களின் பிரதிநிதிகள் ஒருங்கே கூடியிருக்கும் பாராளு மன்றத்தின் சபமதம் பெறாமல் அதன் பெயரையே மாற்றி விட்ட—அக்கிரமத்தை கண்டிக்கத் தவறி விட்டன.

"இன்று முதல் இந்தக் கூடம் இந்திய பார்லிமெண்ட் என்று அழைக்கப்படும்"

— என்று அரசியல் நிர்ணய சபை மூலம் அங்கீகரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தில் மாற்றம் ஏதும் செய்யாமல் பெயரையே திருத்திவிட்டார்கள் 'திருப்புதல்வர்கள்'!

இந்த பெயர் மாற்றம் நேருப் பண்டிதரின் பேச்சினால் மொழிக் கொள்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணியவர்களுக்கு ஒரு பேரிடியைத் தந்திருக்கிறது. நேருவின் ஏற்பாட்டை ஒரு கையால் இந்தியின் வரவைத் தடுப்பது போல் தடுத்து மற்றொரு கையால் மெய் தழுவி வரவேற்பளிக்கும் போக்கிரித் திட்டத்தை—சாணக்கிய தந்திரத்தை தவிடு பொடியாக்கி விட்டார் மாவ்லங்கர்—மசோதா கொண்டுவராமல் கரகோஷந்திற்கிடையே பெயரை மாற்றிவிட்டார், பெரியவர்!

பைபிள் கதையின் பிற்பகுதியில் மட்டும் ஒரு மாற்றம்செய்துவிட்டனர். 'இந்தியமொழிகளின் திலகமல்லவா உங்கள் தமிழ்!' என்று அன்னையின் அருமை பெருமைகளைக் கூறி நம்மை மகிழவைக்க டிலைலா வேஷம் போட்டார் மோதிலால் மைந்தர். ஆனால் அதே சமயத்தில் நம் முடியை வெட்ட கத்தரிக்கோல் கொண்டு வருகிறார் மாவ்லங்கர்-தபால் முத்திரைகளிலே இந்தியைப் பொறித்து நம் தியாக முத்திரைகளை நினைவுறுத்துகிறார்கள்!

— "மோதிலால் மைந்தரின் பேச்சு,கொள்கையிலேஏற்பட்ட திருப்பமல்ல; உங்கள் தமிழென்னும் தங்கச் சுரங்கத்தைச் சுரண்டப் போகும் கொள்ளைத் திட்டம்"—என்று மார்தட்டி, சிறிது நாள் ஓய்வு பெற்றிருக்கும் நமது போர் முரசைத் தட்டுகிறார் மாவ்லங்கர்—

நேரு புன்முறுவல் தவழ பிற தேச பாஷைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாகத் தான் சொல்லுவார்; இந்தியை உடனடியாகத் திணிக்கமாட்டோம் என்றுகூட சமயம் கிடைத்த போதெல்லாம் செப்புவார்; அவையெல்லாம் வெறும் வேஷம் — என்பதை மாவ்லங்கர் மறைமுகமாக எடுத்துரைக்கிறார்.

அவர்களுடைய டிலைலா சாகசத்தை நாமும் அறிவோம்— "கடமை வீரர்களே கிளம்புக களம்—புக"—என்று துந்துபி முழக்கி பாடி வீடு அமைப்போம் என்பதை நினைவுறுத்த விரும்புகிறோம்.

# கலைத்தோட்டம்

## நாடோடி எழுத்தாளன்

★

“பேனா நீட்டியதைக் கோடா லியாலும் வெட்டி வீழ்த்த முடியாது” என்பதை உலகம் உணர்ந்து கொண்ட இருபதாம் நூற்றாண்டு—1936-ம் ஆண்டு.

ரஷ்ய மாமண்டலம்—வால்கா நதிக் கரையோரம்—ஒரு கல்லறை பீடம்—அதன் அருகிலே நிற்கிறான் இன்றைய சோவியத் நாட்டின் வெளி நாட்டு அமைச்சன் மலாட்டோவ். கண்களிலே கலக்கம்—கருத்திலே கவலைத் தோய்வு — இங்கிலையில் அவன் உதடுகள் அசைகின்றன. “மாவீரன் லெனின் மாண்ட பிறகு ரஷ்யாவுக்கு ஏற்பட்ட பெரு நஷ்டம் இந்தக் கல்லறை மறைத்துவிட்ட கடமையாளனை நாம் இழந்ததுதான்” என்கிறான் நடுங்கும் குரலோடு.

உண்மைதான்! ரஷ்யாவுக்கு மட்டுமல்ல; இலக்கிய உலகத்துக்கே பெரும் நஷ்டத்தைத்தான் தேடிக் கொடுத்தது அக் கல்லறை—அன்று.

ஆனால் அந்தக் கல்லறை விழுங்கிய கர்மவீரரோ சாகும் நேரத்தில் சஞ்சலப்படவில்லையாம். அன்னவரின் உடல் நலக் குறைவு கேட்டு—உள்ளக் கவலையைக் கொட்டிக் குவிந்த லட்சோப லட்சம் கடிதங்களுக்குப் பதில் விடுத்தாராம், “ஏ, தவிக்கும் தரணியே! எழுச்சி பெற்ற இலக்கிய உலகே! உன் விழிகளிலே நீர்; ஆனால் குவியப் போகும் என் கண்களிலே களிப்பின் எல்லை; அணையப் போகும் என் நெஞ்சத்திலே பரிபூரண அமைதி! இலட்சியத்தை ஈடேற்றி விட்ட இன்ப அமைதி! இருக்காதா? நான் தோன்றிய தாயகம் தான் தோன்றிகளின் வாள் வீச்சிலே செத்துக் கொண்டிருந்ததைக் கண்டு அலைமோதிய நெஞ்சமல்லவா?... அந்தப் புல்லர்களின் குகை பொது நலப் பூங்காவாக மாறவேண்டுமே — அதற்கென திட்டங்கள் வேண்டுமே—என்று எண்ணினேன். எழுத்தால் ‘எல்லாம்’ செய்தேன். எண்ணம் ஈடேறிவிட்டது. ஆகவே சாகிறேன்; சிரித்துக் கொண்டே சாகிறேன்” என்று.

ஆமாம்! எழுத்தாலே எழுச்சியைத் தூண்டியவர்தான் அந்தக் கல்லறை விழுங்கிய கலைஞரேறு—ரஷ்ய நாட்டு இலக்கியச் சிகரம்—இலக்கியத்தின் மூலம் புரட்சிக்கு வித்திட்ட பொதுவுடமைப் புலி—செத்தும் சாகாத மாக்சிம் கார்க்கி.


சோவியத் நாட்டின் அரசி...

கிய கருமேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்த நேரம்—

தட்டுத் தடுமாறி எழ முயற்சித்த இலக்கியக் குழந்தையை, அரியாசனம் அமர்ந்திருந்தோர் தலையெடுக்க வொட்டாது தடுத்துக் கொண்டிருந்த நிலை.

அந்த வேதனையான சமயத்திலேதான் நிஜ்னி நோவோக்ரேட் என்ற இடத்தில், 1869-ம் ஆண்டு கார்க்கி பிறந்தார், அலக்ஸி பெஷ்கோவ் என்ற இயற் பெயரொடு.

“நான் பெற்ற பாக்கியம்” என்று ரஷ்ய நாடு பெருமை கொண்டாட காரணமான கார்க்கியோ தன் இளமையில் பெரும் அபாக்கியவானாக அலைந்தார்.



ஐந்தாவது வயதில் பெற்றவனையும், அடுத்த ஓரிரண்டு ஆண்டுகளில் பெற்றவளையும் விழுங்கிய “அவர் பிறந்த வேளை” அவரையும் நாதியற்றவனாக நடுத் தெருவில் அலைய விட்டது! உணவும் உடையுமின்றி உலகத்தின் அகண்ட கரத்திலே உருண்டுகொண்டிருந்த அச்சிறுவனை அணைத்து வாழ இடம் தந்தது வால்கா நதிக்கரைதான். ‘எனக்குத் தந்தையாகவும் தாயாகவும் இருந்து வளர்த்து விட்டது அன்னை வால்காதான்’ என்று லெனினை முதன் முறை சந்தித்தபோது குறிப்பிட்டிருக்கிறார் கார்க்கி.

பள்ளி செல்ல வேண்டிய பாலபருவத்தில்—நினைத்தால் மலைப்பு தோன்றுகிறது—கார்க்கி செருப்பு தைத்திருக்கிறார். பிறகு கப்பல் ஒன்றில் கூலியாகவும் வேலைசெய்திருக்கிறார். கார்க்கியின் இலக்கிய வாழ்வுக்கு வித்திட்ட பெருமையைப் பெறுவது அந்தக் கப்பலின் சமையலறைதான்! படிப்பாசை மிகுந்த சமையல்காரன் ஒருவன் கார்க்கிக்கு வயிற்றுக்கு உணவோடு செவிக்கும் உணவு கொடுத்தான்.

துர்க்கனிவ், கோகேல் போன்ற ரஷ்ய கலைஞர்களின் எழுத்துக்களைப் படித்த கார்க்கிக்கு இலக்கிய மோகம் எல்லை மீறியது. அதன் விளைவு? உள்ளத்திலே அமைதியற்ற நிலையை உருவாக்கிவிட்ட அந்த இலக்கிய

வேலையை விழுங்கியது. ரொட்டிக் கடை ஒன்றிலே வேலைக் கமர்த்தி வெளியேற்றியது. பின் ஒரு வழக்கறிஞரை அண்ட வைத்தது. அங்கிருந்தும் துரத்தியது. நாடோடியாக அலைய வைத்தது. கடைசியில்தான் நல்ல காரியம் ஒன்றைச் செய்தது. அவரது கரத்தில் பேனா ஒன்றை எடுத்துத் தந்தது, இருட் குகையில் தடுமாறுபவனின் கையில் ஒளியைத் தருவது போல.

கார்க்கி பேனா எடுத்தார்! மன்னராட்சியின் மமதையின் முன் மண்டியிட்டுக் கிடந்த மக்களினத்தை நோக்கினார்! அவர்களின் தன்மானத்தை மூடியிருந்த அறியாமைத திரையை கிழித்தெறியக் கருதினார்! உருவாக்கினார் எண்ணற்ற எழுத்தோவியங்களை!

“எங்கே, எங்கே?” என்று எழுத்துப் பசியால் ஏங்கிக் கொண்டிருந்த சமுதாயம் அவரது எழுத்துக்களை வாகை சூடி வரவேற்றது.

மார்க்ஸீஸ வாதிகள் பலர் அவரது நட்பை நாடினர். அதன் விளைவாக விரைவிலேயே முடியரசை எதிர்த்து நின்ற புரட்சி இயக்கத்திலே மிகப் பெரிய தலைவர்களில் ஒருவரானார் கார்க்கி. அவரது எழுத்துக் குவியல்கள் பெரு மதிப்பைப் பெற்றன. பெரும் பொருளைக் குவித்தன.

எழுதுமுன்பும் ஏழை எழுதியும் ஏழை என்ற நிலையிலேயே நீடித்தார் கார்க்கி. அறிவுலகம் அவருக்குத் தந்த செல்வம் அனைத்தையும் அவர் விடுதலை இயக்கத்துக்கே அளித்தார். இறுதியில் புரட்சியிலும் கலந்தார்.

1905-ம் ஆண்டு ‘ரஷ்யப் புரட்சி’க்கு முன்னறிவிப்பாக நிகழ்ந்தது ‘இரத்த ஞாயிறு’ என்ற பயங்கர நிகழ்ச்சி. அதிலே லெனினுக்கு அடுத்தபடியாக நின்று செயலாற்றினார் கார்க்கி. ஆனால் குருதி வெள்ளம் பாய்ச்சிய அந்தப் புரட்சியோ குலைந்தது. எழுதுகோல் பிடித்த கரங்களோ இரும்பு விலங்குகளில் சிக்கின.

வாழ்வின் முதல் அத்தியாயத்தை நாடோடியாகவே தொடங்கிய கார்க்கி, தான் விடுதலையானதும் மீண்டும் நாடோடியானார். புரட்சிக்காக பொருளீட்ட பனிரெண்டு வருட காலம் அமெரிக்காவிலும் இத்தாலியிலும் அலைந்தார். புதுமைப் பாணியிலே எழுதி எழுதி குவித்தார். தாய் நாட்டிலே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த புரட்சித் தீயிக்கு வெளிநாட்டிலிருந்து தூபமிட்டார். லெனினின் மனோ வலிமையுடன், கார்க்கியின் எழுத்து வலிமையும் சேர்ந்து ரஷ்ய முடியரசை முறியடித்தது.

தன் நாடோடி வாழ்வுக்கு முற்றுப் புள்ளிவைத்து, 1917-ம் ஆண்டு மீண்டும் ரஷ்ய நாட்டை மிதித்தார் கார்க்கி, புரட்சி பெற்றெடுத்த புதுநாடு என்ற பெருமையோடு — சுதந்திர சோஷலிஸக் குடியரசில்.

கார்க்கி தனது அந்திம காலத்தில் தனது பாரம்பரையான எத்தனையோ எழுத்துச் சிங்கங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தினார், தான் நிறுவிய “அறிவுப் பிரசுரத்”தின் மூலம்.

ரஷ்ய இலக்கியத்துக்கு ‘கலசம்’ அமைத்த கார்க்கி தனது 67—வது வயதில் மறைந்தார்—சோவியத் நாடு மட்டு மல்ல, உலகமே அவர் தம் புகழ்பாட கல்லறை புகுந்தார்.

செங்கொடி உயர்த்தி உலக வல்லரசுகளுடன் போட்டியிடுகிறது ரஷ்ய நாடு இன்று; அது போலவே கார்க்கியின் கரங்கள் தந்த ‘அன்னை’ ‘துயரத்தின் அடித்தளம்’ ஒரு சோல்லோவியம் ‘இருபத்தாறு மனிதர்களும் ஒரு பெண்ணும்’—என்பன போன்ற இலக்கியச் செல்வங்கள் உலக இலக்கியத்துடன் போட்டியிடுகின்றன. கூ.

## கலை வளர்க்கிறார்கள்—அங்கே!

○


இங்கே, முல்லையின் மணத்தை நுகரவிட மறுக்கிறார்கள் மக்களை. அது விஷவாடை, மலரைக்கசக்கிட வேண்டும், மலர்ச் செடியை வேரோடு கிள்ளியெறிய வேண்டுமென்கிறார்கள்.

அங்கே, முல்லை மலரை மக்கள் விரும்பாவிட்டாலும், செடிகளைப் பேணி வளர்த்த தோட்டக்காரன் நட்டப்பட்டிருப்பானே என்று அவனுக்கு பணஉதவி செய்து கைதூக்கி விடுகிறார்கள்.

முன்னது இந்தியாவில், பின்னது பிரான்சு நாட்டில்! இந்திய அரசுக் கட்டில் உண்மை ‘சொர்க்கவாசல்’ எது என்பதை மக்களை உணர விடாமல் கத்திரிக்கோலை நீட்டுகிறது.

பிரான்சில் சொர்க்கவாசலைக் காட்டுகிறவர்களுக்கு புதையல், புகழ் மாலை, தரப்படுகிறது

ஆமாம், நல்ல படங்களைத் தயாரித்தவர்கள் நட்டமடைந்தால் சர்க்கார் அதற்கான பொருளீடுதர [illegible] தாம்!




மதுரையான்—புதுப்பட்டி.

(?) 'கடவுள் உண்டு என்பவன் அயோக்கியன்; இல்லை என்பவன் முட்டாள்' — என்று பேர்னுட்ஷா சொல்லியிருப்பது எல்லோரையும் தாக்குவது போல் இல்லையா?

நிச்சயம் இது, கடவுளைப்பற்றி கவலைப்படாத நம்மைத் தாக்கவில்லை.

சின்னப்பன்—கோவை

(?) ஜப்பான் பார்லிமெண்டில் விவாதம் முற்றி அங்கத்தினர்கள் எல்லோரும் குஸ்தியில் இறங்கி விட்டதைப் போல் டில்லி பார்லிமெண்டிலும் நடைபெறுமா?

தென்னாட்டுப் பிரதிநிதிகள் உரிமைக் குரல் எழுப்ப முடியாமல் மூலையில் ஒதுக்கப்பட்டிருக்கிறார்களே அவர்கள் நாளடைவில் இந்தி வெறியர்களை எதிர்க்கும் பயில்வான்களாக மாறினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

(?) மாஸ்கோ கண்காட்சி சாலையில் நேருவின் படம் இருக்கிறதாமே?

மாஸ்கோவில் மட்டுமென்ன, சுதந்திர திராவிட நாட்டுக் கண்காட்சி சாலையிலும் அவர் படம் இருக்கும்; அந்தப் படத்திற்கு அடியில், திராவிடரின் விடுதலைப் போராட்டத்தின்போது 'நாக்கில் நரம்பு வளராத நோயால் வாடியவர்' என்றும் எழுதப்பட்டிருக்கும்.

வேலன்—மதுரை

(?) மதுவிலக்கை எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறீர்கள்?

அப்படிச் சொல்லவில்லை; மது அரக்கனின் கொடுமையைவிட 'மதுவிலக்கி'ன் கொடுமை அதிகமாக இருக்கக்கூடாதென்பது தான் எங்கள் எண்ணம்.

மதுரநேசன்—தில்லை

(?) உங்கள் கட்சி கருப்பு நிறத்தை கொடியில் பதித்திருக்கிறதே, அப்படியானால் திராவிட நாட்டில் துக்கத்தைக் காட்ட கருப்பு வர்ணம் பயன்படாதே; இது பெரிய தவறல்லவா?

அபாயத்தைக் குறிக்கும் சிகப்பு நிறத்தையே ரஷ்யர்கள் கொடியாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்ததைவிட நாம் ஒன்றும் பெரிய தவறு செய்துவிட வில்லை.

இலக்குமி—புதுக்கோட்டை

(?) தி. மு. க. வின் அடுத்த போராட்டம், ஏதாவது செய்ய வேண்டுமே என்பதற்காக ஆரம்பிக்கப் படுமா?

அப்படியல்ல நண்பரே! போராட்டம் ஒரு வலிமை வாய்ந்த துப்பாக்கி. அந்த துப்பாக்கியை தற்காப்பிற்கும் துஷ்ட விலங்குகளை ஓட்டுவதற்கும்தான் தி. மு. க. பயன் படுத்துமே தவிர, பொழுது போக்குவதற்காக பறவைகளைச் சுட்டுக் கொள்ளாது.

ராமு—மகாதானபுரம்

(?) சந்நியாசிகள் மக்களுக்கு சேவை செய்யவே எல்லாவற்றையும் தியாகம் செய்கிறார்கள். அவர்களை பழிப்பது பாபம்'' என்று 'ஹிந்து' துணை ஆசிரியர் பேசினதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறதே, அது பற்றி தங்கள் கருத்தென்ன!

கருத்தென்னவா? அந்தச்செய்திக்குப்பக்கத்திலேயே, ''பிள்ளை வரம் கேட்கச் சென்ற ஒரு பெண்ணுக்கு மயக்க மருந்து கொடுத்தார் ஒரு சந்நியாசி'' என்றிருந்த செய்தியைப் பார்க்கவில்லையா நீங்கள்?

(?) நீர் எந்தப்படத்தயாரிப்பாளர் உயர்ந்தவர் எனக் கருதுகிறீர்?

மனிதனை; அவன் தானே முதன் முதலில் கடவுளையே தயாரித்தான்.

(?) இந்தியை தமிழர்கள் ஏன் அவ்வளவு கடுமையாகஎதிர்க்க வேண்டும்!

காரணம் அவர்கள் அவ்வளவு 'கடுமை'யாக தமிழை நேசிக்கிறார்கள்.

(?) மேடை ஏறி பேசத் தெரிந்தவர்கள் தான் சட்டசபையில் இருக்க வேண்டுமென்று ஏதாவது நியதி உண்டா!

இதைப்பற்றி காமராசரையும், மௌலானா அபுல்கலாம் ஆசாத்தையும் விசாரியுங்கள்.

(?) உம் கையில் ஒரு ஹைட்ரஜன் குண்டை கொடுத்தால் அதை நீர் என்ன செய்வீர்!

உடனே அதை இமயமலை மீது வீசுவேன்; அப்போதாவது கடலில் மூழ்கிய 'குமரிக் கண்டம்' மீண்டும் தோன்றாதா என்ற நினைவில்!

ஃ

## அகர்வால்....

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

அகர்வால் பழுத்த காங்கிரஸ் வாதி, அரசியல் ஆக்க மன்றத் தேர்தல் காலத்தில மொழிப்பிரச்சினையில் மாநில அரசாங்கங்களுக்கு காங்கிரஸ் அழித்திருந்த உரிமையையும் வாக்குறுதிகளையும் அகர்வால் மறந்திருக்க மாட்டார்— இந்திப்பித்தர் தாண்டன் கொண்டுவந்த தீர்மானத்தையும்கூட தோற்கடித்து, மொழி வழி மாநிலம் பிரித்தபின்பு அவர்கள் கருத்துக்கேற்றபடிதான் பொது மொழி பிரச்சினையை தீர்ப்பது என்று காங்கிரஸ் முடிவு கட்டியது என்பதும் அவர் நெஞ்சை விட்டு இன்னும் அகன்றிருக்காது — இன்று மொழி வழி மாநிலம் ஒட்டிய கிளர்ச்சி தென்னாட்டில் தற்போது இல்லையென்றால்-அந்த கிளர்ச்சி தென்னாட்டில் செத்துவிட்டதென்றல்ல பொருள் — எல்லைக்குழு நியமித்தாகிவிட்டது, என்பதற்காகத்தான் தமிழர் பட்டாளம் அமைதியாக இருக்கிறது என்பதை அகர்வால் மறந்து விடக்கூடாது. வேளா வேளைக்கு உண்டு உறங்கி வெள்ளையருடைய மாதர் மத்தியில் பணி புரிந்த ஆஸ்ரம வாசியல்லவா அகர்வால்! அவருக்கு இதெல்லாம் விளங்குவது கடினம்தான்! எரிமலை வெடிப்பது காலம் குறிப்பிட்டு அல்ல என்பதை அவர் அறிய மாட்டார் – ஏதோ, தென்னாட்டார்மீது அகவல்பாட அனுப்பப்பட்டவரைப் போல இங்குவந்தார்—பாடினார் – போய் விட்டார் அவ்வளவுதான்!

○

விரைவில் ஆரம்பமாகிறது

?

மு. க. வின் புதிய தொடர் கதை

## சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக் கூடம்

கருணாநிதி பார்க், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

உயர் நிலைப்பள்ளி, கல்லூரி, எஞ்சினீயரிங் பரீட்சைகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

ஆரம்பம் 9—6—54

மாணவர்களுக்குத் தனிப்பயிற்சி அளிப்பதில் திறமையும் அனுபவமும் மிக்க பேராசிரியர்கள் உள்ளனர்.

திரு. என். ஜே. தேவதாஸ் எம். ஏ., திருமதி ஜூடித் லூயிஸ் பி. ஏ. (ஆனர்ஸ்), திரு. ஐ. திவ்வியநாதன் பி.ஏ. (ஆனர்ஸ்), வெங்கடராமன் எம்.ஏ. எல். டி., என். பிச்சை பி.ஏ. (ஆனர்ஸ்), எம். வெங்கட்ராமன் எம். ஏ. பி. (காம்) என். எஸ். கிருஷ்ணசாமி எம். ஏ., வி. துரைராஜ் பி. எஸ்சி. பி. டி., ஆர். ஜான்ஸன் பி. ஏ. பி டி., ஜி. ரத்தினம் பி. எஸ்சி. எ. பாலசுப்ரமணியன் பி. எஸ்சி. டி. எ. சாமி (விஷாரத்) வித்வான் சோழகர், கே. ஜான் பி.ஏ., லூயிஸ் பீட்டர் பி. எ., ஆர். சுப்ரமணியன் பி. ஏ., சி. சாமி பி. ஏ.

எஞ்சினீயரிங்:–திரு. எம். பாலகிருஷ்ணன் பி. ஈ., எம். கே. நடராஜன் பி. ஈ., பி. சங்கரன் பி. ஈ.

வைஸ் பிரின்ஸிபால்

திருமதி. ஜூடித்லூயிஸ் பி. ஏ. (ஆனர்ஸ்)
(கோவை அரசினர் கல்லூரி முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர்)

பிரின்ஸிபால்

திரு. என். ஜே. தேவதாஸ் எம். ஏ.
(திருச்சி நகரில் தனிப்பயிற்சி கூடங்களை நிறுவியவர்களில் முதன்மையானவர்)

அலுவலகம் :
16, நந்தி கோவில் தெரு, தெப்பக்குளம் பி.ஓ., திருச்சி

செயலாளர்.
ஐ. திவ்வியநாதன் பி. ஏ. (ஆனர்ஸ்)

விபரங்களுக்கு நான்கணு ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்.

செயலாளர் சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக் கூடம்
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. அலுவலகம்: 62, எஸ். பி. [illegible] தெரு, ராயப்பேட்டை, சென்னை–14.